**சார்பு நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்**

19.01.2021

**OS**. 6/2016

வா.சா. 3 கிருஷ்ணசாமி
குறுக்குவிசாரணை:
எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை. வாதி அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கும், வாதிக்கும் சுமார் 15 வருடங்களாக பழக்கம். நானும், வாதியும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். தாவா பூமிக்கும், வாதியின் பூமிக்கும் ஒரு கி.மீ. தூரம் உள்ளது. நானும், சாட்சி சரவணனும் சொத்தை வாங்குவதாற்கும், விற்பதற்கும் இடைத்தரகர் செய்தோம் என்றால் சரிதான். சொத்தை விற்பது சம்மந்தமாக பிரதிவாதி என்னிடம் எந்த ஆவணமும் கொடுக்கவில்லை. பிரதிவாதி , வாதியிடம் நீதிமன்றத்தின் தீர்ப்பை காண்பித்தார், ஆனால், கொடுக்கவில்லை. எனக்கு தெரிந்தவரை தாவா சொத்தின் விஸ்தீரணத்தை வாதி அளந்து பார்க்கவில்லை. தாவா கிரய ஒப்பந்தத்தில் வாதி, பிரதிவாதிகள் கையெழுத்து செய்வதற்கு முந்தைய நாள் திங்களூர், பதிப்பாளையத்தில் சுப்பிரமணியம் பத்திர எழுத்தர் வீட்டில் வைத்து கிரய ஒப்பந்தம் தயார் செய்யப்பட்டது. கிரய ஒப்பந்தம் தயார் செய்தபோது நான் இருந்தேன். ஆவணம் தயார் செய்வதற்கு பிரதிவாதி நீதிமன்றத்தின் தீர்ப்பு நகலை கொடுத்தார். மேற்படி தீர்ப்புநகலை நான் படித்துப்பார்க்கவில்லை. கிரய ஒப்பந்தம் ஒன்றுதான் தயார் செய்யப்பட்டது. அந்த கிரய ஒப்பந்தத்தில் மீண்டும் காலநீட்டிப்பு குறிப்பு கொளப்பலூரில் வாதியின் வீட்டில் வைத்து எழுதப்பட்டது. பிரதிவாதி, குறைவு

முத்திரைத்தாளுக்கு சார்பதிவாளர் அலுவலகத்திற்கு பணம் கட்டவேண்டும் என்று பணம் வாங்கினார். தாவா கிரய ஒப்பந்தம், வாதியாலும், என்னாலும்மோசடியாக தயார் செய்யப்பட்டது என்றும், அதில் உள்ள கையெழுத்து பிரதிவாதியினுடையதல்ல என்றும், அதன் சில பக்கங்கள் கலர் ஜெராக்ஸ் எடுக்கப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் அதற்கு நானும் உடந்தையாக இருந்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.